**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 305/2022

எ.ம.சா 1 சரஸ்வதி

| | | |
|---|---|---|
| Name | : | சரஸ்வதி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 25.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் மூ.த.சா.ஆ 1. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள டி.என்.76 ஏ.எப்.3926 மற்றும் டி.என்.76.ஏ.எச்.0669 என்ற வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை முன்னிலைப்படுத்துகிறேன். 21.7.2022 மற்றும் 22.7.2022 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் மூ.த.சா.ஆ 2, 3 ஆகும். 1ம் எதிர்மனுதாரர் சந்திரகுட்டி என்பவரின் ஒட்டுனர் உரிமம் சம்பந்தமான ஆவணங்களை முன்னிலைப்படுத்துகிறேன். அந்த ஒட்டுனர் உரிம விபரங்கள் மூ.த.சா.ஆ 4 ஆகும். அந்த சந்திரகுட்டி என்பவருக்கு போக்குவரத்து இலகுரக வாகனங்களை இயக்குவதற்கு மட்டுமே ஒட்டுனர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 09.02.2022 ம் தேதி சந்திரகுட்டி என்பவருக்கு இலகுரக வாகனத்தை இயக்குவதற்கு ஒட்டுனர் உரிமம்

இருந்தது.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

சந்திரகுட்டி என்பவருக்கு விபத்து தேதியில் இலகுரக வாகனங்களை இயக்குவதற்கு உரிமம் இருந்தது என்றால் சரிதான்.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.